பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 01 2026** **SUNDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** நாடு முழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3)** இலங்கை தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

**4)** திமுக அரசு மக்கள் விரோத போக்கினை கடைபிடித்து வருவதாக பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு நிதின் நபின் குற்றம் சாட்டியுள்ளார்.

**5)** நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற **301** ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று ராஜ்கோட்டில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ''சீர்திருத்தம் — செயலாக்கம் — மாற்றம்'' என்பதை தாரக மந்திரமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் தேக்கநிலை ஏற்பட்டுள்ள போதிலும் இந்தியா சீரான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<<>>>>>

நாட்டின் அனைத்துப்பகுதிகளும் சீரான வளர்ச்சியை பெற வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி-யினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாடு முழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பிஜேபி-யினர் பணியாற்ற வேண்டும் என்று அக்கட்சியின் தேசிய செயல் தலைவர் திரு நிதின் நபின் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவை சிங்காநல்லூர் சட்டப்பேரவை தொகுதியில் நடைபெற்ற வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

மக்கள் விரோத போக்கினை திமுக அரசு கடைபிடித்து வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதுகுறித்தும், திமுக அரசின் ஊழல்கள் குறித்தும், பிஜேபி-யினர் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் திரு நிதின் நபின் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

இலங்கை தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசியலமைப்பு சட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக அந்நாட்டில் வசிக்கும் தமிழ் சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கருத்தில்கொண்டு பிரதமர் இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட வேண்டும் என்றும் முதலமைச்சர் அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

திமுக-வை பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநில அமைச்சருமான திரு ஐ பெரியசாமி கூறியுள்ளார்.

இன்று திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என காங்கிரஸ் கோருவது அவர்களது உரிமை என்று குறிப்பிட்டார்.

இருப்பினும், திமுக-வை பொறுத்தவரை கூட்டணி அரசு இல்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியுடன் உள்ளதாக திரு ஐ பெரியசாமி கூறினார்.

<<<<<<>>>>>

ஆம்னி பேருந்துகள் கூடுதல் கட்டணங்களை வசூல் செய்வது தொடர்பான புகார்கள் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் எச்சரித்துள்ளார்.

இன்று அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — சிவசங்கர் - 38 Sec. )***

<<<<<<>>>>>

அரசு திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணிப்பதற்கான பிரகதி, கட்டமைப்பு வசதி திட்டங்களை செயல்படுத்துவதில் பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது.

இந்த திட்டத்தின்மூலம் பிரதமர் திரு நரேந்திர மோடி நேரடியாக திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து வருகிறார்.

சம்பந்தப்பட்ட திட்டங்கள் குறித்த காலத்தில் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கு இது உதவிகரமாக உள்ளது.

கூட்டாட்சி தத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக பிரதமர் இந்த திட்டத்தை பயன்படுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன்மூலம், திட்டங்கள் செயலாக்கத்தில் காலதாமதம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<>>>>>

ஊராட்சி செயலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையில் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய கோரிக்கையை வலியுறுத்தி ஊராட்சி செயலாளர்கள் ஆறாவது நாளாக போராட்டம் நடத்திவருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக அரசால் பாதிக்கப்படாதவர்களே இல்லை என்ற சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு

வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte —செந்தாமரை கண்ணன் - 56 Sec. )***

இதற்கிடையே, நாகை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் — 30 Sec.)***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னையில் பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கான நுழைவுக் கட்டணம் நாளை முதல் இணையதளம் வாயிலாக மட்டுமே வசூலிக்கப்படும் என்று வனத்துறை அறிவித்துள்ளது.

-------------

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் போதைப்பொருள் தயாரித்தது தொடர்பாக காவல்துறையினர் ஒருவரை கைது செய்தனர்.

----------------

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

----------------

குற்றாலம் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

-------------------

சென்னையில் இணையதள மோசடியில் ஈடுபட்டது தொடர்பாக, பத்து பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

------------------

சென்னை மெரினா கடற்கரையில் இன்று மாலை நடைபெறுவதாக இருந்த திருக்குறள் பழந்தமிழ் இலக்கிய இசை நிகழ்ச்சி, கனமழை முன்னெச்சரிக்கை காரணமாக **18**-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

*<<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் **301** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை **9** புள்ளி இரண்டு ஓவரில், ஒரு விக்கெட் இழப்பிற்கு **44** ரன் எடுத்துள்ளது.

வதோதராவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து பேட் செய்த நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **300** ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Daryl Mitchell 84** ரன் எடுத்தார்.

முகமது சிராஜ், ஹர்சித் ரானா மற்றும் பிரசீத் கிருஷ்ணா தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

----------------

மணிலாவில் நடைபெற்ற சர்வதேச ஐஸ் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Schaleen Jaoquim Fernandes 3** தங்கப்பதக்கங்களை வென்றார்.

**<<<<<<END>>>>>**